26.08.2025

O.S.No. 173/2021

DW1– ராமையாத்தேவர்– த/பெ. முத்தையாத்தேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.08.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( 3,4 பிரதிவாதிகள் தரப்பில்)

1. எனக்கு வாதியை தெரியும். வாதி காட்டக்கூடிய தபசில் விவரம் திருவாடுதுறை ஆதினத்திற்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள கிராமம் முழுவதுமே திருவாடுதுறை ஆதினத்திற்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். மேற்படி கிராமத்தில் பலநபர்களுக்கு வீட்டுமனைகளாகவும், பயிர் செய்யும் இடங்களாகவும் குத்தகைக்கு ஆதினத்தால் விடப்பட்டு அனுபவம் செய்கிறார்கள் என்றால் சரிதான். அவ்வாறு வீட்டுமனையாக கொடுத்த இடத்தைதான் வாதி அனுபவம் செய்கிறார் என்றால் சரிதான். தபசில் விவரமாக காட்டியுள்ள இடம் திருவாடுதுறை ஆதினத்தால் வழங்கப்படட இடம், அளவுகளில் என்னால் எந்த ஆட்சேபனையும் சொல்லமுடியாது என்றால் சரிதான்.

2. எனக்கு தெரிந்து சுமார் 12,13 வருடங்களாக தாவா இடத்தை அனுபவம் செய்துவருகிறார். தாவா இடத்திற்கு கீழ்புறமாக உள்ள எனது இடம் எனக்கு முன்பு மாடசாமித்தேவர் அனுபவம் செய்துவந்தார். நான் இந்த வழக்கில் மாடசாமித்தேவர் எவ்வளவு இடம் அனுபவம் செய்துவந்தார் என்பதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அளவுகளுடன்(கிழமேல், தென்வடல்) எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் அனைத்தும் பணம் செலுத்தியவர் விவரத்தில் மட்டுமே எனது

பெயர் உள்ளது என்றும், குத்தகை காட்டக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

3. பி.வா.சா.ஆ.9 ஆவணம் நான் குத்தகைக்கு எடுத்ததாக காட்டக்கூடிய ஆவணம் என்றால் சரிதான். அதில் புல எண் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.10 ஆவணத்திலும் புல எண் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அளவுகள் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தச்சுமுழ அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் எல்கையில் ஆதினம் என்றுமே காட்டப்பட்டுள்ளது, யார் அனுபவம் என்று காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் பி.வா.சா.ஆ.11 ஆவணத்திலும் விஸ்தீரணம் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ள என்றும், அதன் எல்கையில் யார் அனுபவம் என்று குறிப்பிடப்படவில்லைஎன்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.10,11 ஆவணம் வாதியின் கீழ்பக்க இடத்தை காட்டக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

5. பொதுவாக ஆதினத்தின் குத்தகை வழங்கும்போது நான்குமால் காட்டும்போது குத்தகைதாரர் விவரம் குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். அதேபோல் தான் வாதியின் குத்தகை ஒப்பந்தத்தில் நான்குமாலில் குத்தகைதாரர் விவரம் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் பி.வா.சா.ஆ.10,11 ஆவணம் பெற்றது பொறுத்து நான் அதற்காக கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. நான் வாதியின் இடத்திற்கு கீழ்புறம் ஆதின இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக ஆதினத்திலிருந்து 3,4 பிரதிவாதியின் எதிருரை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. இது தொடர்பாக கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

7. வாதிக்கு ஆதினம் கொடுத்த அளவுகளின் அடிப்படையில் தான் அவர் அனுபவம் செய்வருகிறார் என்றும், மேலும் நான் கீழ்புறம் 4 அடி ஆக்கிரமிப்பு செய்து கம்பிவேலி போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கம்பிவேலி போட்டுள்ளேன், ஆனால் அது எனது இடத்தில்தான் போட்டுள்ளேன். எனது வேலியால் வாதியின் கீழ்புற சுவற்றை அவரால் பராமரிக்க முடியவில்லை என்றால் சரியல்ல.

8. அதைபோல் எனது இடத்திற்கு கீழ்புற பாதையை மறைத்து கோவிலுக்கும், சுடுகாட்டுக்கும் செல்லமுடியாமல் வேலி அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. இது தொடர்பாக ஊர்மக்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். நான் பாதைக்காக 10 அடி எழுதிக்கொடுத்துள்ளேன். வாதிக்கு ஆதினம் கொடுத்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் அதை அப்புறப்படுத்த நான் கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.